★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 35630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 18உ வியாழன் (1–3–56) ★ ★ வெளியூர்: மாசி 19உ வெள்ளி (2–3–56) [இதழ் 221

இரகசியம் காப்பாற்றப்பட்டது!

"இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் தேசீயமாக்கப்பட்டதும், அவைகளின் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுவதற்காக இரண்டு திங்களுக்கு முன்பாகவே அதிகாரிகளுக்கு மத்திய அரசாங்கம் இரகசியமாகப் பயிற்சியளித்தது; முன்னேற்பாடாகத் தரப்பட்ட பயிற்சியின் இரகசியம் மிகமிக வெற்றிகரமாகக் காப்பாற்றப்பட்டிருக்கிறது"

—என்று நிதி அமைச்சர் தேஷ்முக் மக்கள் சபையில் அறிவித்தார்

'இந்திய யூனியன் அமைப்பு செயல்படாது'

'ஜனாதிபதியும், பிரதமரும் இந்தி மொழிப் பகுதியினராகவே இருப்பர்'

'தெற்கு-வடக்கு தனித்தனி கூட்டாட்சிகள் வேண்டும்'

'இரண்டு கூட்டாட்சியும் இணைந்த இணைப்புக் கூட்டாட்சி தேவை'

மூன்று விவகாரங்களில் சட்டமியற்றுதல் இணைப்புக் கூட்டாட்சியின் பொறுப்பு'

கவர்னர்-ஜெனரல் ஆச்சாரியாரின் உள்ளக்கிடக்கை

"நீங்கள் ஒரு பெரும் பிழையைச் செய்கிறீர்கள்; பகுதிகள் அனைத்துக்கும் சம பிரதிநிதித்துவம் கொண்ட இந்தியா முழுமைக்கும் ஒரு கூட்டாட்சி ஏற்பாடு செயல்படாது. அத்தகைய கூட்டாட்சியில் ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் எப்பொழுதும் இந்தி மொழி வழங்கப்படும் பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். எனவே வடக்கிற்கு ஒரு கூட்டாட்சியும், தெற்கிற்கு ஒரு கூட்டாட்சியும் ஆக இரண்டு கூட்டாட்சி ஏற்பாடு இருக்க வேண்டும். தெற்கு-வடக்கு கூட்டாட்சிகளை இணைக்கும் ஒரு இணைப்புக் கூட்டாட்சி ஏற்படுத்த வேண்டும். மூன்று விவகாரங்களின் பொறுப்பை இணைப்புக் கூட்டாட்சிக்கு ஒதுக்க வேண்டும். தனித் தனியான இரண்டு கூட்டாட்சிக்கும் சம பிரதிநிதித்துவம் தரவேண்டும்."

இக்கருத்தை திரு. இராசகோபாலாச்சாரியார் அறிவித்துள்ளார்.

எப்பொழுது? எவரிடம்?

சாதாரணமானவராக இருக்கும் இந்த நிலையில் திரு. இராசகோபாலாச்சாரியார் மேற்படி கருத்தைக் கூறவில்லை.

அவர் கவர்னர்-ஜெனரலாக இருந்தகாலை அறிவித்துள்ளார்.

கருத்து கவனிக்கத் தக்கதுடன் மட்டுமல்லாமல், அதை அறிவித்தவரையும் அதுவும் எத்தகைய பொறுப்பான பதவியிலிருந்து அறிவித்துள்ளார் என்பது மிகமிக சிந்திக்கத் தக்கது.

கருத்தை அறிவித்தவரும் பெரியவர் — அறிவிக்கப்பட்டவரும் அற்பமானவரல்ல! ஆச்சாரியார் கவர்னர் - ஜெனரலாக இருக்கும்பொழுது, அவர் கீழ் சட்ட மந்திரியாகப் பணியாற்றிய டாக்டர் அம்பேத்காரிடம் அக்கருத்து அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

அறிவித்தவரும், அறிவிக்கப்பட்டவரும் ஒருபுறமிருக்க, கருத்து உருவான சூழ்நிலையும் மிக முக்கியமானதாகும்.

அரசியல் ஆக்கக் குழுவில், இந்திய அரசியல் சட்டம் விவாதிக்கப்பட்ட தருணத்தில், கவர்னர் - ஜெனரலாக இருந்த ஆச்சாரியார், அரசியல் சட்டத்தின் மூல ஆசிரியரான சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்காரிடம், மேற்படி இந்திய யூனியன் அமைப்புக்கு எதிரான கருத்தை அறிவித்திருப்பது ஆராயத்தக்கதாகும்.

இத்தகவலை, ஏதோ ஒரு சொற்பொழிவில் டாக்டர் அம்பேத்கார் கூறிவிடவில்லை. எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்.

'மொழி வழி ராஜ்யம் பற்றிய சிந்தனைகள்' என்ற ஒரு நூலை டாக்டர் அம்பேத்கார் இயற்றியுள்ளார். அந்நூலில் இத்தகவலை அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

நெய்வேலி திட்டம் வெற்றி பெறுமா?

'சாத்தியம்' என்று சர்க்கார் உறுதியாக நம்புகின்றனராம்!

"நெய்வேலி சுரங்கத்திலிருந்து பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுப்பது சாத்தியமென்று சர்க்கார் நம்புகின்றனரா?" என்று, மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி குறிப்பிட்டதாவது:—

"தற்போது கிடைக்கும் புள்ளி விவரங்களிலிருந்து பழுப்பு நிலக்கரி சுரங்கத் திட்டம் வெற்றி பெறுவது சாத்தியம் என்று சர்க்கார் உறுதியாக நம்புகின்றனர்."

நெய்வேலியிலா உர உற்பத்திசாலை?

ஒரிசாவிலுள்ள ரூர்கேலாவிலும், நெய்வேலி (சென்னை)யிலும் இரு ரசாயன உர உற்பத்திச்சாலைகளை நிறுவுவதற்கு மத்திய ஆட்சியினர் தீர்மானித்துள்ளனராம்; ஏற்கனவே, நங்கலில் ஒரு ரசாயன உரத் தொழிற்சாலை இருப்பது நினைவிருக்கலாம்.

மக்கள் சபையில் இது குறித்து அறிவித்த உற்பத்தி மந்திரி, இவ்விரண்டு உரத் தொழிற்சாலைகளுக்குத் தலா ரூ 20 கோடி முதல் ரூ. 30 கோடி வரையில் செலவாகுமென எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

10 கோடி ரூபாய் செலவாகியதாம்!

புதுடில்லி, பிப். 28—

சென்ற பொதுத் தேர்தலில் சர்க்கார், ரூ. 10,26,37,251 செலவழித்திருக்கிறார்களாம்.

துணைத் தேர்தல்களுக்கு ரூ. 31,50,382 செலவழிக்கப்பட்டிருக்கிறதாம்.

மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், பார்லிமெண்டரி விவகார அமைச்சர் இத்தகவலைத் தந்துள்ளார்.

தற்காப்பு இலாகாவில் வேலை நிறுத்தம்?

பூனா, பிப். 28—

தற்காப்பு இலாகா நிறுவனங்களில் உத்தேச ஆள்குறைப்பு நடவடிக்கையை எதிர்த்து, ஒரு பொதுவேலை நிறுத்தம் செய்யத் தயாராகும்படி அ. இ. தற்காப்பு நிறுவனங்களின் ஊழியர்கள் சம்மேளனம் சுற்றறிக்கை அனுப்பி இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

பம்பாய் நகரைப் பெற மராட்டியர் அணிவகுப்பு

ஒத்துழையாமையும் மறியலும் உருவாகின்றன

காங்கிரஸ் நீங்கிய மற்ற கட்சியினர் முஸ்தீபு

மாராட்டிர மொழி மாநிலத்தைப் பெற, காங்கிரஸ் கட்சி நீங்கிய மற்ற கட்சியினர் ஒருங்கு திரண்டுள்ளனர்

அமைதியான மறியலும், ஒத்துழையாமையும் அக்கூட்டுக் கட்சிகளின் அறப்போர் திட்டங்களாகின்றன.

பெல்காம் நகரில் 9-ந் தேதி அறப்போர் துவங்க இருக்கிறது.

மாராட்டிரத்தின் மற்றப் பகுதிகளில் 16-ந் தேதி அறப்போர் துவங்கப் போகிறது.

மாகாண சீரமைப்பு மசோதா பம்பாய் சட்ட சபையில் விவாதத்திற்கு வருகிற பொழுது, அங்கு அறப்போர் துவங்கப்படும் எனத் தெரியவருகிறது.

12 நபர்களைக்கொண்ட சிறு சிறு அணிகளாக அறப்போர் தொண்டர்கள் மாவட்ட அதிகாரியின் அலுவலகம் முன் அமைதியாக மறியல் செய்வர். தாலுகா நிலையம், அரசாங்க அலுவலகங்கள் முன்பு மறியல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

அறப்போர்த் தொண்டர்கள் கைது செய்யப்படுவார்களானால், மேலும் மறியல் மூன்றுவது தொண்டர் படையும் கைது செய்யப்படும்வரையில் தினம் தினம் நடைபெறும் என்று திட்டமிடப்பட்டு இருக்கிறது.

மாகாண சீரமைப்பு மசோதாவைக் கைவிடுதல், அமைச்சர்கள் பதவி துறத்தல், அரசியல் கைதிகளை விடுவித்தல் —என்ற கோரிக்கைகளை முன்வைத்து பம்பாய் சட்டசபை முன்பு மறியல் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

அரசாங்கக் கடன் கோரிக்கைகளுக்குக் கடன் கொடுக்க மறுப்பது; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குக்கடன் கொடுக்காது இருப்பது, அரசாங்க அலுவல்களைப் பகிஷ்கரிப்பது போன்றவை ஒத்துழையாமைப் போராட்டத்தின் அம்சங்களாகும்.

சம்யுக்த மாராட்டிர சமிதி அறப்போராட்டங்களை முன் இருந்து நடத்துமெனத் தெரிய வருகிறது.

'சேலத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிறுவ வேண்டும்'

'மத்திய அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் வலியுறுத்த வேண்டும்'

மேல் சபையில் ஓமந்தூராரின் கோரிக்கை

"விவசாயத் துறை உள்ளிட்ட அரசாங்கத் துறைகளில், ஏற்கனவே ஒரே ஒரு தனி நபரால் சாதிக்கப்பட்டவைகள், இப்பொழுது மூன்று அல்லது அதிகமானவர்களால் சாதிக்கப்படுகின்றன. அனைவருமே அதிகமாகப் பணிபுரிய முன்வர வேண்டும். அரசாங்கத் துறைத் தலைவர்களும் அமைச்சர்களும் நிர்வாகத்தில் கூடுதலான கருத்துச் செலுத்தவேண்டும். மாதத்தில் இருபது நாட்களாவது அவர்கள் தலைநகரிலிருந்து அலுவல்களைக் கவனிக்க வேண்டும்.

"ஆதாரப் பள்ளிகளைத் திருத்தம் செய்து அமைக்க வேண்டும். இப்பள்ளிக்கூடங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அறிந்துகொள்வதற்கு, அமைச்சர்கள் தங்கள் சுற்றுப் பயணத்தின்போது திடீரென்று இப்பள்ளிகளைப் பார்வையிட வேண்டும்,"

—என்ற, சென்னை மேல்சபையில், வரவு—செலவுத் திட்ட விவாதத்தின்மீது பேசுகையில், முன்னாள் முதலமைச்சர் ஓ பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"விற்பனை வரியை அரசாங்கம் ஒழுங்காக வசூலிக்குமானால் இந்த ஆண்டில் புது வரிக்கே அவசியமிருந்திருக்காது. பஸ்களும், லாரிகளும் உபயோகப்படுத்தும் டீசல் எண்ணெய்க்கு வரி விதித்ததினால் கவலைப்படுகிறவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள். ஆனால் அந்த வரி, நீர் இறைப்பு இயந்திரங்களுக்கு டீசல் எண்ணெயை உபயோகப்படுத்தும் விவசாயிகளை பாதித்துவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

"கனரகத் தொழில்கள் இந்த மாகாணத்தில் நிறுவப்பட வேண்டும். சேலத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலை நிறுவ

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 1–3–56 வியாழன்

கூட்டணித் தீர்மானம்

முதலமைச்சர் காமராசர் அச்சுறுத்தினர்; அரசாங்க இயந்திரம் முழுமூச்சாக எதிர்த்துப் பணியாற்றியது; ஒழுங்கு, அமைதி காத்தல் என்ற போர்வையில் ஊர் பாதுகாப்புப் படை துப்பாக்கியை ஏந்திய வண்ணம் பீதியைக் கிளப்பிப் பவனி வந்தது; காங்கிரஸ் இதழ்கள் பெருங் குரல் கொண்டு எதிர்ப் பிரச்சாரம் செய்தன; ஸ்தாபன ரீதியில் காங்கிரஸ் கட்சியும் எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்தின; இருந்தாலும் இவ்வளவு பலம் பொருந்திய மூர்க்கத்தனமான எதிர்ப்புச் சக்திகளையும் நாணித் தரை நோக்கச் செய்துவிட்டனர் தமிழ்ப் பெருங்குடி மக்கள், கட்டுப்பாடாகப் பொது வேலைநிறுத்தத்தை வெற்றி பெறச் செய்ததின் மூலம். இப்பெருமித வெற்றி கண்டு, நிறைந்த மனமகிழ்வு பெற பொது வேலைநிறுத்தத்தை உருவாக்கி ஊக்குவித்த சர்வ கட்சி கூட்டணியினருக்கு முழு உரிமை உண்டு. அதில் மற்றவர்கள் அழுக்காறு கொண்டு அலறித் துடிப்பதில் அறிவுடைமையே இல்லை.

பொது வேலைநிறுத்தமும் கடையடைப்பும் தமிழ் மக்களைப் பொருத்த குறிப்பிட்ட பொதுப் பிரச்சினைகளை அடிப்படையாகக்கொண்டு உருவானதேயல்லாது, கூட்டணியில் இணைந்திருந்தத் தனிக் கட்சிகளின் இலட்சிய நிறைவேற்றத்துக்காக அல்ல என்பதைச் சாமானியத் தமிழ் மகனும் அறிந்தே இருக்கிறான். எனவே, அதில் தனிப்பட்ட அரசியல் கட்சியின் இலட்சியங்களைவலிய இழுத்து முடிபோட்டுப் பேசுவது, அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்துக் கைவலித்துச் சலித்துப் போனவன் கதையாகவே முடியும். நிற்க,

பொது வேலைநிறுத்தத்திற்கும் கடையடைப்புக்கும் தமிழ் மக்களை உடன்படச் செய்ய இருபது நாட்களாக புயல் வேகத்தில் தமிழ்நாடெங்கும் பலமான பிரசாரம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கில் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. அத்தகுக் கூட்டங்கள் கூட்டணி சார்பிலும் நடைபெற்றன. கூட்டணியில் பங்கு கொண்ட தனித்தனி கட்சிகள் சார்பிலும் நிகழ்வுற்றன.

அவ்வாறு நடைபெற்ற ஒவ்வொரு கூட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கூடியிருந்து விஷய விளக்கம் பெற்றனர். இந்தியப் பேரரசின் எதேச்சாதிகாரத்தையும், சென்னை அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தையும் மக்கள் நன்கு புரிந்துகொண்டனர். அர்த்தாலில் பங்கு கொண்டு வெற்றி பெறச் செய்வதின் மூலம், தங்கள் நியாயமான விருப்பம் ஈடேற வகை செய்வது என்று தமிழ் மக்கள் உணர்ந்துகொண்டனர்.

அவர்கள் ஏமாற்றம் அடைந்துவிடவில்லை. அவர்கள் முயற்சி வீணாகிவிடவில்லை. அவர்கள் அர்த்தால் விழலுக்கு இறைத்த நீராகிவிடவில்லை. எதிர்பார்த்த பலன் கைமேல் கிடைத்துவிட்டது.

தேவிகுளம் — பீர்மேடு — திருத்தணி போன்ற தமிழ்ப் பகுதிகளில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் சென்னைத் தமிழகத்தோடு இணைய விரும்புகிறார்கள் என்ற உண்மையை, இந்தியப் பிரதமரிடம் ஏற்கனவே வலியுறுத்திக் கூறி இருக்கவேண்டும் நமது முதலமைச்சர் கனம் காமராசர். அவர் கூறத் தவறிவிட்டார் அல்லது அவர் எடுத்துக்கூறியும் அவர் பேச்சை இந்தியப் பிரதமர் அலட்சியம் செய்துவிட்டார் என்றே நிலைமை இருந்துவந்தது. அந்த வேதனை தரும் விரும்பத்தகாத நிலைமையை, அர்த்தால் மூலம் தமிழ் மக்கள் மாற்றமுறச் செய்துவிட்டிருக்கிறார்கள்.

பிணக்குள்ளப் பகுதிகளை, வாக்கெடுப்பு மூலம் முடிவு கட்டுவது என்ற உயர்ந்த மக்களாட்சி மரபைக் குறித்து வேண்டுமென்றே பேச்சுமூச்சில்லாது இருந்த இந்தியப் பிரதமர், அம்முறையின் சாத்தியக்கூறு பற்றி மூச்சுவிட முனைந்திருக்கிறார். பிணக்குள்ள பகுதிகளில் வாக்கெடுப்பு சாத்தியமானதே என்று முணுமுணுக்கத் தொடங்கி இருக்கிறார்.

இதிலுள்ள ஜனநாயகப் பண்பை எடுத்துக்காட்டி, இதைச் செயலாற்ற வேண்டுமென்பதே எமது குறிக்கோள் என்று கூட்டணி தீர்மானித்து இருக்கிறது.

அமிர்தசரஸ் காங்கிரஸ் மேடையிலும்கூட காங்கிரஸ் ஞானாசிரியன் என்ற முறையில் இந்திய பிரதமர்பேசும்பொழுதுகூட, வாக்கெடுப்பு முறையை கேலி செய்துதான் பேசினார். ஒரே மருந்தை எல்லா நோய்களுக்கும் தரலாமா என்று கேட்டு, வாக்கெடுப்புத் தத்துவத்தை நையாண்டி செய்தார் அவர்.

குறிப்பிட்ட ஒரு பிணிக்குத் தரப்படும் ஒரே மருந்துக்கு மற்றப் பிணிகளையும் போக்கக் கூடிய சக்தி இருக்கலாம். மற்றப் பிணிகளைப் போக்கும் சக்தி அந்த மருந்துக்கு இருக்கிறது என்பதற்காக, குறிப்பிட்ட ஒரு பிணிக்கே உகந்த அந்த மருந்தைக் கொடுக்க மறுப்பது கூடவே கூடாது. அப்படி மறுப்பது தேர்ந்த மருத்துவ முறையாகாது என்பதை இந்தியப் பிரதமர் மறந்தே போய்விட்டார்.

வாக்கெடுப்புப் பற்றி அமிர்தசரசில் கேலியாகப் பேசிய இந்தியப் பிரதமரின் அறிவுக் குழப்பம் தெளிவுபெற தமிழ் மக்களின் புனிதமான செயல் தேவைப்பட்டது. ஜனநாயகம் பேசுகிறவர்கள், அதிலிருந்து வழிவிலகிச் செல்லும்பொழுது, அர்த்தால் போன்ற தீவிரமான முறை தேவைப்படுகிறது என்ற உண்மையை, இந்தியப் பிரதமரின் மனமாற்றம் மெய்ப்பிக்கிறது.

வாக்கெடுப்பு சாத்தியந்தான் என்பதை மக்கள் சபையில், இந்தியப் பிரதமர் என்ற முறையில் அவர் பேசி இருந்தபோதிலும், இன்னும் அக்கருத்துக்கு இந்தியப் பேரரசின் சின்முத்திரை விழவில்லை. எனவே, அக்கருத்தை உள்ளடக்கிய தெளிவான அறிக்கை ஒன்றை இந்தியப் பேரரசு உடனடியாக வெளியிட வேண்டும்.

அத்தகு அரசாங்க அறிக்கை வெளிவருவதற்குக் கூட்டணியின் தீர்மானமே போதுமானது என்றாலும், ஜனநாயகப் பண்பை அடிக்கடி மறந்து நடந்துகொள்வதில் மிகுதியும் பழக்கப்பட்டுவிட்ட இந்தியப் பிரதமருக்கு, மேலும் சிறிதளவு தூண்டுதல் இருப்பது இன்றியமையாததாகும் என்றே கருதுகிறோம். எனவே, அந்தப் பொறுப்பை இனித் திறம்படச் செய்ய வேண்டியது சென்னை அரசாங்கத்தின் நீங்காக் கடமையாகும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

முதலமைச்சர் காமராசர் அவர்களுக்கு இது ஒரு சோதனை நேரம். இந்தச் சோதனையிலிருந்து அவர் தப்பவேண்டுமானால், வாக்கெடுப்பை ஏற்றுக்கொண்டு திட்டவட்டமான அறிக்கையை உடனடியாக வெளியிடும்படி இந்தியப் பேராசை அவர் கட்டாயப்படுத்த வேண்டும்; அதுவும் இன்றே செய்யவேண்டும்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வாக்கெடுப்பின் மூலம்தான் பெற்றாக வேண்டும் என்பது கூட்டணியின் குறிக்கோளாகும். தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைப்பெற்றுத் தருவதின் பொறுப்பு கூட்டணிக்கு மட்டுமே உரித்தானது அல்ல. அவ்வாறு முதலமைச்சரும் நம்பி இருப்பார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. நாடாளும் நாயகன் என்ற முறையில் கனம் காமராசருக்கும் அப்பொறுப்பில் பங்கு உண்டு. ஏற்கனவே எப்படி நடந்துகொண்டிருந்தபோதிலும், இனிமேலாவது தமது பொறுப்புணர்ந்து நடந்துகொள்வதில் அவர் சுறுசுறுப்பாக இருப்பார் என்றே நாம் நம்புகிறோம்.

தமிழ் மக்கள் உரிமை எக்கேடு கெட்டால் என்ன என்று, ஏனோதானோ என்று கனம் காமராசர் இந்தக் கட்டத்திலும் இருந்து விடுவாரானால், அன்பர் ஆச்சாரியாருக்குக் காட்டிய வழியைத்தான் தமிழ் மக்கள் இவருக்கும் காட்டுவார்கள் என்பதை இவர் மறந்துவிடக்கூடாது. இது தமக்குப் பழக்கமான விடுதலைப் போராட்டக் காலமல்ல, நாடாளும் காலம் என்பதை மறந்துவிடாது கனம் காமராசர் நடந்துகொள்ள வேண்டும் என்று எச்சரிக்கிறோம்.

வடக்கில் உருவாகும் வளமான திட்டம்

பீகாரின் உருவத் தோற்றத்தை மாற்றியமைக்க முயற்சி

பிரம்மாண்டமான அளவில் நிர்மாணமாகும் கங்கா பாலத்தின் பலன்

நாள்தோறும் 16 மணி நேரம் இயந்திரங்கள் இயங்குகின்றன

3 பிரிவுகளாகத் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்

'மொகாமே என்னுமிடத்தில் கங்கை நதிமீது கட்டப்பட்டு வருகிற பாலத்தினால் பீகாருக்கு ஏற்படக்கூடிய நன்மை விளக்கப்படுகிறது.

'கங்கா பாலத் திட்டம்' ஒரு பிரம்மாண்டமான கட்டுமான வேலைத் திட்டம்; அதற்காக சுமார் 20 கோடி கன அடி மண்ணை வெட்டி அப்புறப்படுத்த வேண்டியிருக்கிறது. இதற்காக விசேட இயந்திரங்களை உபயோகிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கங்கை நதி மீது சென்றால், கடலில் பிரயாணம் செய்வது போலிருக்கும். நதி அவ்வளவு விசாலமாக இருக்கும். பிரயாணம் மெதுவாக நடக்கும். மனதுக்குத் தென்பாகவும், உணர்ச்சிக்கு விருந்தாகவும் இருக்கும்: ஆனால், தினசரி அக்கரைக்குப் போய் வேலை செய்கிறவர்களின் அவசரப் பிரயாணத்துக்கு அது தடையாக இருக்கும்.

கங்கை நதி பீகார் மாநிலத்தை இரு பிரிவாகப் பிரிக்கிறது; வட பீகார், தென் பீகார் இரண்டுக்கும் அது எல்லைக்கோடாக இருக்கிறது. வடபீகாரின் அமைப்பு தென் பீகார் அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுவிதமாக இருக்கிறது. மழைக் காலத்தில் எங்கே பார்த்தாலும் வெள்ளக் காடாக இருக்கும். எப்படித்தான் அங்குள்ள மக்கள் அங்கே குடியிருக்கிறார்களோ என்று ஆச்சரியம்கூடத் தோன்றும்.

இப்போது கட்டப்பட்டு வருகிற கங்கா பாலம் பூர்த்தியானால், வட பீகார்—தென் பீகார் என்ற பேச்சே இராது; பீகார் ஒன்றாக இணைந்துவிடும்; போக்கு-வரத்துப் பிரச்சினை தீர்ந்துவிடும்.'

மொகாமேயில் பால வேலை மும்முரமாக நடக்கிறது சுமார் 12 பிரம்மாண்டமான இயந்திரங்கள் மண்ணை அப்புறப்படுத்தி வருகின்றன. மூன்று கோடி கன அடி மண்ணை அவை அகற்ற வேண்டியிருக்கிறது; இந்த வருடத்திலேயே அந்த வேலை முடிய வேண்டும். தினசரி 2 500 காலன் எரிபொருள் உபயோகிக்கப்படுகிறது.

வட பீகாரில் நடந்துவருகிற பிரம்மாண்ட கோசி திட்ட வேலைக்கு இந்தப் பாலத்தினால் ஏராளமான அனுகூலம் கிடைக்கும் கோசி திட்டமும், இந்தப் பாலமும் சேர்ந்து பீகாருக்கு உண்டுபண்ணுகிற நன்மை வசதிகள் மூலம் பீகாரின் உருவத் தோற்றமே வெகுவாக மாறிவிடும்.

★

குறிப்பிட்ட காலமேயுள்ள இந்தப் பருவத்துக்குள் இந்த வேலை நடக்கவேண்டுமானால் இயந்திரங்களை உபயோகித்துத்தான் மண்ணை அகற்றவேண்டும் என்பது தெரிய வந்தது. வேலை நட்டாற்றிலுள்ள ஒரு தீவிலிருந்து நடக்கவேண்டும். ஏராளமான தொழிலாளர்களை அங்கே வைத்து வேலை வாங்குவதற்கு இட வசதி, சாதன வசதி, சுகாதார வசதி முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதைச் செய்யத்தக்க வாய்ப்பில்லை; எனவே, இயந்திரங்களை உபயோகிக்க முடிவு செய்யப்பட்டது.

இயந்திரங்களைத் தென்கரையிலிருந்து இத்தீவுக்குக் கொண்டு போவது ஒரு பெரிய பிரச்சினை; அதற்கு வேண்டிய படகுகள், கப்பல்கள் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இயந்திரங்களைச் சேற்று நிலத்தில் இறக்க வேண்டியிருந்தது. பூமியில் பதிந்துவிடுகிற இயந்திரங்களை வெளியே எடுத்து வேலை நடைபெறும் இடத்திற்குக் கொண்டு போக வேண்டியிருந்தது; தீவில் பொடி மணல் அதிகம். அது இயந்திரங்களுக்குள்ளும், எண்ணெய்க்குள்ளும் படிந்துவிடும்; இதைத் தடுப்பதும் அவசியம். இந்தத் திட்டத்தில் முதல் கட்ட வேலை முழுவதையும் ஒரே கட்டத்தில் பூர்த்தி செய்தாக வேண்டும்.

இந்த இயந்திரங்களுக்கு வேண்டிய சிப்பந்திகளைத் திரட்டுவது முக்கிய பிரச்சினை. நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள ஊழியர்கள் திரட்டப்பட்டனர். புதிதாக ஆட்களை நியமித்துப் பயிற்சி அளிப்பது சாத்தியமில்லை; அதற்கு வேண்டிய அவகாசம் இல்லை; எனவே, இயந்திரங்கள் வந்து சேரும்போதே ஆட்களையும் அங்கங்கே இருந்து திரட்டி நியமனம் செய்யப்பட்டது பஞ்சாப் முதல் திருவாங்கூர்—கொச்சி வரை நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஊழியர்கள் திரட்டப்பட்டிருக்கின்றனர். அவர்கள் ஆர்வத்தோடு வேலை செய்துவருகிறார்கள்

இயந்திரங்களுக்கு வேண்டிய உதிரி பாகங்களைச் சேமிப்பது முக்கியமான காரியம்; ஒரு பருவத்தில் வேலை செய்வதற்கு இயந்திர மூலதனச் செலவில் 15 அல்லது 20 சதவிகிதம் தொகையுள்ள உதிரி பாகங்கள் தேவை; அவைகளை முன்கூட்டியே சேமித்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால், வேலை சுணங்காமல், தேக்கமில்லாமல் நடக்கிறது. 80 சதவிகித இயந்திரங்கள் எப்போதும் தயாராக இருக்கும். உதிரி பாகங்கள் தவிர, எரிபொருள், மசகு எண்ணெய், கயிறு, வடம், கருவிகள், மரை ஆணிகள், கிழிந்த துணி முதலிய எத்தனையோ சாதனங்கள் தேவை. அவைகளும் முன்கூட்டியே சேமித்துவைக்கப் பட்டுள்ளன.

எரிபொருள் எண்ணெய்க்காக 10,000 காலன் டாங்குகள் இரண்டும், 2000 காலன் டாங்குகள் நான்கும் உள்ளன. அவை வடிகட்டும் இயந்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. அது மின்சார பம்புகள் மூலம் அவைகளை இயந்திரங்களில் ஊற்றுகின்றன. இயந்திரங்களுக்கு வருமுன் எண்ணெய் நன்றாக வடிகட்டப்பட்டுவிடுகிறது. தினசரி இரண்டு தடவை ஒவ்வொரு இயந்திரத்துக்கும் எண்ணெய் ஊற்றவேண்டும். எண்ணெய் பிடிக்க சுமார் 1 மணிநேரம் ஆகிறது.

மசகெண்ணெய் ஊற்ற 'கம்ப்ரஸ்ட் எயர்' முறை கையாளப்படுகிறது. இதற்கு ஒவ்வொரு இயந்திர சாதனத்துக்கும் ரூ. 25 000 விலை பிடிக்கும். ஆனால் அதனால் கிடைக்கும் நன்மை இத்தொகையை ஈடுகட்டிவிடும். ஒரு தடவை உபயோகித்துக் கழிகிற எண்ணெய் மீண்டும் சுத்திகரித்து உபயோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இயந்திரங்கள் இரண்டு 'ஷிப்ட்' (விடுதி)களாக வேலை செய்கின்றன. ஒவ்வொரு 'ஷிப்டிலும்' 8 மணி நேரம் வேலை நடக்கும். மீதி எட்டுமணி நேரம் இயந்திர பராமரிப்பு வேலை நடக்கும். எல்லா அங்கங்களும் பழுதுபார்க்கப்பட்டு, துடைக்கப்பட்டு, இயந்திரங்கள் சரி செய்யப்படும். 16 மணி நேரம் வேலைசெய்ய வேண்டியிருப்பதால் இயந்திரங்களில் கோளாறும் பழுதும் ஏற்படலாம்; அவைகளை உடனுக்குடன் கவனித்துச் சீர்செய்வது அவசியம். இதற்காகத் தனி சிப்பந்திகள் இருக்கிறார்கள்; அவர்கள் மூன்று 'ஷிப்டு'களில் வேலை செய்கிறார்கள்.

பிப். 20—பொது வேலைநிறுத்தம்

பட்டிதொட்டிகளிலெல்லாம் கடையடைப்பு

பூந்தோட்ட—வாழைத் தோட்டத் தொழிலாளர்களும் பங்கேற்றனர்

தமிழ் மக்கள் எழுச்சியுற்ற காட்சி

தமிழகம் கண்டறியாத பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு கடந்த பிப். 20-ல் நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்புக்குரிய அந்த மகத்தான சம்பவம், தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் நடைபெற்றுள்ள விபரங்கள் நமக்குக் கிடைத்தவண்ணமுள்ளன ; அவற்றினை முடிந்தவரையில் சுருக்கித் தந்து வருகிறோம்.

சிறு சிறு கிராமங்களில்கூட விவசாயிகள் எல்லாம் வேலைக்குச் செல்லாதிருந்திருக்கின்றனர் ; அறுவடைகூட அன்று பல ஊர்களில் நடைபெறவில்லை.

பொங்கிவழிந்த ஆர்வத்தோடு, பிப். 20—பொது வேலை நிறுத்தம் நடைபெற்றிருப்பதை இந்த நிகழ்ச்சிச் சுருக்கங்கள் சொல்லுகின்றன.

அரியலூர்

காலை 8-45 மணிக்கு, ஊர்வலம் புறப்பட்டு முக்கிய தெருக்களின் வழியாக நடந்து 11 மணிக்கு முடிவடைந்தது; பெரும்பாலான கடைகள் மூடிக்கிடந்தன; தொழிலாளர்களும், மாணவர்களும் அர்த்தாலில் கலந்துகொண்டனா சில்காங்கிரஸ் தோழர்கள் கடைகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டும் வியாபாரிகள் ஒத்துழைக்கவில்லை. அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது.

மணமேடு

2,000-க்கு மேற்பட்ட நெசவாளர்களும், எல்லா விவசாயிகளும், மற்றும் அலகரை பஞ்சாயத்துக்குள்ளிட்ட எல்லா கிராமத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்து கண்டன ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். காலையில் மாபெரும் ஊர்வலம் கிராமத்தின் பல முக்கிய வழியாக வந்து பாவோடி மைதானத்தை வந்தடைந்தது. கூட்டத்தில் உறுதி எடுத்துக்கொள்ளப்பட்டது.

பாலமேடு

மாலை 5 மணிக்கு, தொழிலாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அடங்கிய ஊர்வலம் பெரியகடை வீதியிலிருந்து புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று வானொலித் திடலை வந்தடைந்தது பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் காலகுட்டி தலைமை வகித்தார். தோழர்கள் எம். கே. சன்னாசி, த. மாணிக்கவேல்பாண்டியன், எம். பழனிச்சாமி ஆகியோர் பேசினர். பின்னர், உறுதி மொழியை தோழர் கே. சித்தாண்டி படிக்க மக்கள் அதனை ஏற்றனர்.

மணக்கால்

கடைகளும், காப்பி கடைகளும், அறைவை மில் முதற்கொண்டு சில்லரை கடைகள் பூராவும் அடைபட்டுக்கிடந்தன; மாலை தி. மு. கழகக் குழுவினரால் உறுதி மொழி வாசிக்கப்பட்டது.

வடுகப்பட்டி

ஓட்டல்களும், வெற்றிலைப் பாக்குக் கடைகளும் மூடப்பட்டன குறிப்பாக விவசாய பெருங்குடி மக்கள் நெல் அறுவடைக்குக்கூடச் செல்லவில்லை. மாபெரும் ஊர்வலம் ஊர்முழுதும் சுற்றி அண்ணு திடலை வந்தடைந்தது. தோழர் சி. கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இரெ. ஜெனார்த்தனம் பேசினார் ; உறுதிமொழி ஏற்றபின் கூட்டம் கலைந்தது.

வங்கனூர்

கடையடைப்பும், பொதுவேலை நிறுத்தமும் அமைதியாக நடைபெற்றது. மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை.

மாலை 3 மணிக்கு சுமார் 2,000 பொதுமக்கள் கொண்ட ஊர்வலம் நடைபெற்றது பின்னர் உறுதி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கீழவளவு

எல்லாக் கடைகளும், அரிசி மில்களும் அன்று முழுதும் மூடப்பட்டு அர்த்தால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வூர்களிலிருந்து மேலூரில் நடந்த சர்வ கட்சி கூட்டணி ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் 20 தி. மு. க. தொண்டர்கள் கால்நடையாகச் சென்று கலந்துகொண்டனர்.

புளியங்குடி

காந்தி கடை வீதியிலும், மெயின் ரோடிலும் மற்றும் நகரமெங்குள்ள வர்த்தகப் பெருமக்கள் கடை அடைத்தும், நெசவாளர்கள் பொதுவேலை நிறுத்தம் செய்தும், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அர்த்தால் செய்தும் ஆதரவு தந்தனர். இந்நகரிலுள்ள பாராளு மன்ற உறுப்பினர், மற்றும் காங்கிரசு பிரமுகர்களும்; அடைத்த கடைகளைக் கட்டாயப்படுத்தித் திறக்கச் சொல்லியும், மிரட்டியும் கூட கடைகள் திறக்கப்படவில்லை.

மாலை 3 மணி அளவில், புளியங்குடிநகர் இதுவரை கண்டிராத மாபெரும் ஊர்வலம் காந்தி கடை வீதியில் துவங்கி முக்கிய தெருக்கள் வழியாக சென்று, மீண்டும் காந்தி கடைவீதி அடைந்து அமைதி குலையாத நிலையில் சர்வ கட்சி கூட்டணி உறுதிமொழி வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திருமானூர்

பாதை ஓரக் கடைகள் உட்பட எல்லாக் கடைகளும் மூடிக் கிடந்தன. பெரும்பாலான மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. ஊரிலுள்ள அரைவை மில், சோடா பேக்டரி முதலிய தொழில் நிறுவனங்கள் வேலை செய்யவில்லை. கிராமத் தொழில்களான தச்சு, கொல்லுப்பட்டறைகள்கூட மூடிக் கிடந்தன. அர்த்தால் அமைதியுடன் நடைபெற்றது.

அய்யம்பேட்டை

காலை 9 மணிக்கு, தோழர் எஸ் ஆறுமுகம் தலைமையில் ஊர்வலம் கீழமகவடியில் துவங்கி, முக்கிய வீதி வழியாய் வந்து சினிமாக் கொட்டகை மைதானத்தை வந்தடைந்தது.

மாலை 6 மணி அளவில் தோழர் டி பி இராமானுசம் தலைமையில் தோழர்கள் எஸ். ஆறுமுகம், ஆர். எஸ். முத்துசாமி, க. சோ. இராமச்சந்திரன், வி இராமசாமி, எ. எம். கோபு ஆகியோர் பேசினர். உறுதி மொழியை தோழர் எம். கிருட்டிணமூர்த்தி வாசித்தார்.

* * *

சாயத் தொழிற்சாலைகள் திறக்கப்படவில்லை ; கைத்தறித் தொழிலாளர்கள் பணியாற்றவில்லை ; பள்ளிகளும் திறக்கப்படவில்லை காலை 9 மணிக்கு தி மு. கழகத்திலிருந்து 500 பேர் கொண்ட ஊர்வலம் புறப்பட்டுச் சென்று பகல் 1 மணிக்கு கலைந்தது.

பாண்டமங்கலம்

பொதுவேலை நிறுத்தம் செய்தும், கடையடைப்பு செய்தும், மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமலும் முழு அர்த்தால் நடைபெற்றது. சினிமாவும் நடைபெறவில்லை.

மாலை 2 மணிக்கு போலீஸ் அதிகாரிகள் அர்த்தாலில் கலந்துகொண்ட முக்கியமான 17 தோழர்களைப் போலீஸ் லாரியில் ஏற்றிக்கொண்டு சென்று ஊருக்கு 1½-மைலுக்கு அப்பால் விட்டுவிட்டனர். சில காங்கிரஸ் தோழர்களும், போலீஸ் அதிகாரிகளுமாகச் சேர்ந்துகொண்டு வியாபாரிகள் சங்கத் தலைவரிடம் 2 மணி நேரம் வாதாடியும், ஒவ்வொரு கடைக்காரரிடமும் வற்புறுத்தியும் மாலை 5 மணிக்கு மேல் கடைகளை திறக்கும்படிச் செய்தனர்.

தேவபாண்டலம்

எல்லாக் கடைகளும் மூடப்பட்டன. 'ரைஸ் மில்'கள் மூடப்பட்டன ; பள்ளிக்கு மாணவர்கள் குறைவாகச் சென்றனர். விவசாயிகள், நெசவாளிகள் யாரும் வேலை செய்யாமல் வேலை நிறுத்தம் செய்தனர்.

எலப்பாக்கம்

தி. மு. கழகத் தோழர்களும் ஊர்ப் பெருமக்களும் சேர்ந்து அமைதியான முறையில் கடையடைப்பு, பொதுவேலை நிறுத்தம் செய்தனர். வாரச் சந்தையும் கூடவில்லை.

தாண்டானூர்

கடைகள் மூடிக் கிடந்தன ; பள்ளிக்கு மாணவர்கள் செல்லவில்லை ; அர்த்தால் அமைதியான முறையில் நடைபெற்றது. 26 தோழர்கள் கைது செய்யப்பட்டு, 3 மணி நேரத்தில் 24 பேரை மட்டும் விடுதலை செய்து, இரவு 1 மணிக்கு மற்ற இரு தோழர்களான துளசி, மாணிக்கம் இருவரையும் அனுப்பிவிட்டனர்.

அன்று மாலை கழகக் கட்டிடத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு மாரியம்மன் கோவில் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடந்தது. தோழர் எ பெரியசாமி உறுதி மொழியை வாசிக்க மக்கள் ஏற்றுக்கொண்டனர்.

மானூர்

மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை ; கொடிக்கால் தொழிலாளர்களும், உழவுத் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்லாமல், பொது வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்டனர் ; கடைக்காரர்கள் தங்கள் கடைகளை அடைத்துவிட்டனர்.

மாலை 4 மணிக்கு தி. மு க அலுவலகத்திலிருந்து தோழர் சு. முத்துக்குமார் தலைமையில், மாபெரும் ஊர்வலம் (இதுவரை மானூரில் இம்மாதிரி ஊர்வலம் நடந்தது கிடையாது) புறப்பட்டு முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று காளிகோவில் திடல் வந்தடைந்து தோழர் கு. ம. துரையால் உறுதிமொழி வாசிக்கப்பட்டு கூட்டம் முடிவடைந்தது

இளைஞர் காங்கிரஸ்காரர்கள் செய்த முயற்சி எவ்விதத்திலும் பலனளிக்கவில்லை.

தென்னூர்

தென்னூர் வட்டத்தைச் சேர்ந்த பகுதிகளிலுள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் மாணவர்கள் செல்லவில்லை—பள்ளிகள் மூடிக்கிடந்தன ; 'போஸ்டல் டெலிவரி'யும் நிறுத்தப்பட்டது தோழர் அ முனுசாமி, தலைமையில் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது.

குணியமுத்தூர்

பொது வேலைநிறுத்தம் சிறந்த முறையில் நடைபெற்றது ; 4 காங்கிரஸ்காரர்கள் மட்டும் தங்கள் ஓட்டல்களைத் திறந்துவைத்திருந்தனர்.

பரவை

முழு அர்த்தால் மேற்கொள்ளப்பட்டு மாலை 5-30 மணிக்கு, சர்வ கட்சியினரின் ஊர்வலம் கிராமப் பொது மைதானம் வந்தடைந்து உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மணப்பாறை

கடைகள் முழுவதும் மூடி அமைதியான முறையில் அர்த்தால் நடைபெற்றது. பிப். 19-ந் தேதி இரவு சுமார் 12 மணிக்கு, தோழர்கள் மதிவாணன், எஸ் எஸ். சுப்பிரமணியம், ஜி. நாராயணன், சி. கந்தசாமி, வடிவேலன், டி. எம். ஜக்கிரியா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

மூடியிருந்த கடைகளைத் திறக்கும்படி காங்கிரஸ்காரர்கள் கூறியும் வியாபாரிகள் மறுத்துவிட்டனர்.

மாலை 4 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு நேரு சதுக்கத்தை அடைந்தது. அங்கு பொதுக்கூட்டம் தோழர் மா. இளங்கீரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எ. அற்புதம், கே. சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர். பின்னர், உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உள்ளிக்கோட்டை

கடைகள், ஓட்டல்கள், அரைவை மில்கள், அனைத்தும் மூடப்பட்டதுடன், துவக்க உயர்நிலைப்பள்ளிக்கு 80-சதவிகித மாணவர்கள் செல்லவில்லை.

சக்கரமல்லூர்

பொது மக்களும்; பயிர்த் தொழிலாளர்களும், மின்சாரத் தொழிலாளர்களும், மருத்துவ விடுதியினரும், சலவைத் தொழிலாளர்களும், பள்ளி ஆசிரியர்களும்,; மாணவர்களும், வியாபாரிகளும், பொது வேலைநிறுத்தத்தை அமைதியுடன் மேற்கொண்டனர்.

இதுபோன்றே, எசையனூர் கிராமத்திலும் கழகத் தொழிலாளரும், பொதுமக்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் வேலைநிறுத்தம் செய்தனர்.

சிங்கிபுரம்

பள்ளிகள் மூடப்பட்டன ; கடைக்காரர்கள் கடை அடைப்பு செய்தனர்.

கணிக்கம்பட்டி

திரு. வி. க. உயர்தர ஆரம்பப் பள்ளி மாணவர்கள் ஆதரவாலும் பொது மக்களின் ஒத்துழைப்பாலும் ஒரு மாணவர்கூட பள்ளிக்குப் போகாமலும், வணிகர்கள் வியாபாரஞ் செய்யாமலும், உழவர்கள் உழாமலும் ஒத்துழைத்து வெற்றி தேடித்தந்தனர்.

சமயநல்லூர்

கடைகள், உணவு விடுதிகள் அடைபட்டிருந்தன ; அறுவடை செய்யும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அரிசி அரைக்கும் ஆலைகள் நிறுத்தப்பட்டிருந்தன. தொழிலாளர்கள் எந்த வகையான தொழிலையும் செய்யவில்லை, மாணவர்கள் 5 சதவிகிதமே பள்ளிக்குச் சென்றனர். அன்று மாலை, மக்களால் உறுதி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இடையக்கோட்டை

கடைகள் அனைத்தும் பன்னிரண்டு மணிவரையிலும், மூடிக் கிடந்தன. முடி திருத்தும் நிலையம் அனைத்தும் அடைக்கப்பட்டிருந்தன. பள்ளிகள் திறந்திருந்தன என்றாலும் மாணவர்கள் பலர் செல்லவில்லை. மாலையில் ஊர்வலம் நடைபெற்றது.

சூலூர்

எல்லாக் கடைகளும் மூடப்பட்டன; நகரிலுள்ள ஜின்னிங் பாக்டரிகள், மளிகைக் கடைகள், உணவு விடுதிகள் பெட்டிக் கடைகள், மற்றுமுள்ள எல்லாப் பொது நிறுவனங்களும் மூடப்பட்டன; பள்ளிக்கு 25 சதவிகித மாணவர்கள் செல்லவில்லை. சினிமாக் கொட்டகைகள் மூடப்பட்டது ; மிகவும் அமைதியான முறையில், நகரம் செயலற்று இருந்தது.

காலை 10 மணியளவில், வள்ளுவர் படிப்பகத்திலிருந்து, சர்வ கட்சிக் கூட்டணியின் சார்பில் தோழர் எஸ். என். அற்புசாமி தலைமையில ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகள் வழியாக, மீண்டும் படிப்பகம் வந்தடைந்தது. தோழர் எஸ். என். அற்புதசாமி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அர்த்தால் வெற்றிகரமாக, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை நிலைநிறுத்தி, மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது.

திருவெண்காடு

கடைக்காரர்கள், வண்டிக்காரர்கள், தொழிலாளர்கள் விவசாயிகள் எல்லோரும் வேலை நிறுத்தத்தில் ஒத்துழைத்தார்கள். மாலை 3 மணிக்கு, தோழர் இரா. இராமையா தலைமையில் ஊர்வலம் ஒன்று மங்கைமடம் கடைத்தெருவிலிருந்து முக்கிய வீதி வழியாக வந்து மேல வீதியை வந்தடைந்தது. தோழர் அரங்கநாதன் உறுதி மொழியை வாசித்தார் ; பொது மக்கள் அதனை ஏற்றனர்.

வெள்ளனூர்

எல்லாக் கடைகளும் மூடப்பட்டன. காலை 10 மணிக்கு சிறப்பான முறையில் ஊர்வலம் நடைபெற்றது. இவ்வூரில் இதுபோன்ற கடையடைப்பும், ஊர்வலமும் இதற்கு முன் நடைபெற்றதில்லை. ஊர்வலத்தின் முடிவில் உறுதி மொழி மேற்கொள்ளப்பட்டது.

மேட்டுமகாதானபுரம்

காப்பிக்கடைகள், பலசரக்குக் கடைகள், பெட்டிக்கடைகள், காய்கறி கடைகள் எல்லாம் மூடிக்கிடந்தன ; பூந்தோட்டத் தொழிலாளர்கள், வாழைத்தோட்ட தொழிலாளர்களும் மற்றுமுள்ள எல்லாத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தனர். அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது.

பெருந்துறை

சர்வகட்சிக் கூட்டணியினரின் கூட்டம் 20—2—56 மாலை 7 மணியளவில் தோழர் கி. தண்டபாணி தலைமையில் நடைபெற்றது; அதுபோது உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது.

முகவூரில் 180 பேர் கைது

24 தோழர்கள் ஒரு வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்

பிப். 19 இரவில், போலீசாரால் இரு தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

மறுநாள், கடைகள் எல்லாம் மூடப்பட்டன ; பள்ளிக்குச் சில மாணவர்களே சென்றனர். எல்லாப் பொதுவேலைகளும் நின்று விட்டன. அங்கொன்றும் இங்கொன்றுமாக இரண்டொரு கடைகள் மூடப்படவில்லை. உணவு விடுதிகள் அடைபட்டுகிடந்தன ; தறித் தொழிலாளர்கள், புகையிலைத் தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை.

பஸ் முன்நின்று அமைதியாக முழக்கமிட்ட தோழர்கள் பலரைப் போலீசார் கைதுசெய்து சேத்தூர் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

கைதாகிச் சேத்தூரில் வைக்கப்பட்டிருந்த தோழர்கள் தொகை சுமார் 180 அதில், இராசபாளையம் கொண்டுசெல்லப்பட்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் சப்-மாஜிஸ்டிரேட்டால் ஒருவாரச் சிறை தண்டனை பெற்று மதுரை மத்திய ஜெயிலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 24 இதில் 12 பேர் தி. மு. க; 9 பேர் கம்யூனிஸ்டு; 2 பேர் பி. சோ ; ஒருவர் சோஷலிஸ்டு ஆகும்.

இந்திய சர்க்காரின் துண்டு விழும் வரவு-செலவுத் திட்டம்

வீண் செலவைத் தடுக்க ஏற்பாடு

எதிர்காலத்தில் கடின நிலைமை ஏற்படக்கூடுமென நிதி அமைச்சர் எச்சரிக்கை

புதுடில்லி, பிப், 29—

தமது 6-வது ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை மக்கள் சபையில் அமைச்சர் சி. டி. தேஷ்முக் சமர்ப்பித்து, முதல் ஐந்தாண்டுத் திட்டமாவது ஒரு திருப்திகரமான அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறதென்றும், 'நாட்டின் பொருளாதாரத்தை உருவாக்குவதில் பின்னும் திடமானதொரு கட்டுக்கோப்புக்கு அது நன்கு அடிப்படை கோலியிருக்கிறது' என்றும் தெரிவித்தார்.

நடப்பு ஆண்டில் ரூ. 17.35 கோடி ரெவின்யூ துண்டு விழுமென்று கருதப்பட்டதற்குப் பதிலாக, இப்போது ரூ. 12.31 கோடி உபரியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், எக்சைஸ் வரிகள் அபிவிருத்தி அடைந்திருப்பதும் தற்காப்புச் செலவினத்தில் மிச்சம் ஏற்பட்டிருப்பதுமே இதற்குப் பெரிதும் காரணம் என்றும் அவர் கூறினர்.

ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட ரூ. 327 கோடிக்குப் பதிலாக இப்போது மொத்தத் துண்டு ரூ. 222 கோடியாக இருக்குமென்று யூகிக்கப்படுகிறது.

வருகிற நிதி ஆண்டில் தற்போதுள்ள வரிவிகித நிலைமையில், வருமானம் ரூ. 493.6 கோடியாகவும், செலவினம் ரூ. 545.43 கோடியாகவும் இருக்குமென்றும், ரெவினியூ கணக்கில் ரூ. 5183 கோடி துண்டு விழும் என்றும் அனுமானிக்கப்படுகிறது.

அடுத்த நிதி ஆண்டுக்கு மொத்தத் துண்டு ரூ. 390 கோடி அளவில் இருக்குமென்று கருதப்படுகிறது.

1955-ம் ஆண்டில் பொருளாதார நிலைமை எல்லாத் துறைகளிலும் பெரிதும் முன்னேற்ற மடைந்திருக்கிறதாம்! அந்த வருடத்தில் உணவு விஷயத்தில் இருந்துவந்த மிச்சமுள்ள கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுவிட்டனவாம்! தொழிலுற்பத்தியில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதாம்!

வர்த்தக நிலுவை நிலைமை திருப்திகரமாக இருந்தபோதிலும், அபிவிருத்தி ஏற்பாடுகளை பின்னும் துரிதப்படுத்தத் திட்டமிட்டிருப்பதன் காரணமாக, எதிர் காலத்தில் இது சம்பந்தமாய்க் கடின நிலைமை ஏற்படக் கூடுமென்று நிதி மந்திரி எச்சரிக்கை செய்தார்.

இந்தக் காரணத்தினால், ஏற்றுமதித் தொழில்களை ஊக்குவதற்கும், மற்றப்படி அந்நியச் செலாவணியை சேமிப்பதற்கு அல்லது சம்பாதிப்பதற்கும் கூடுமான வகையிலெல்லாம் முயற்சி செய்வது அவசியம் என்று அவர் கூறினர்.

கூடியவரையில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து, வீண் செலவைத் தடுக்கும் நோக்கத்துடன், மத்திய அமைப்புக்களிலும், அரசாங்க அமைப்புக்களிலும் முக்கியமான திட்டங்களின் விஷயத்திலும் தீவிரமான பரிசீலனைக்கு ஏற்பாடு செய்யக்கூடிய விசேட அதிகாரக் கமிட்டியொன்றை அமைக்க வேண்டுமென்று நிதி மந்திரி ஆலோசனை கூறினர்.

கழகக் கூட்டம்

★

ஒண்டிப்புதூர் :

ஸ்டேன்ஸ் காலனி மைதானம்

(சஸ்தூரி மில் சமீபம்)

3—3—56 மாலை 6-30 மணிக்கு

பேசுபவர் :

கண்ணதாசன்

அனுதாபக் கூட்டம்

2—3—56 மாலை 6 மணிக்கு, சென்னை — அரண்மனைக்காரத் தெரு, கோகலே மண்டபத்தில், பிரஜா - சோஷலிஸ்டுத் தலைவர் ஆசார்யா நரேந்திர தேவ் அவர்களின் மறைவுக்காக சென்னை மக்களின் அனுதாபக் கூட்டம் நடைபெறும்.

சேலத்தில் ஒரு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணிப்பது அனுபவ சாத்தியமான யோசனையாகும். அவ்வேற்பாட்டை மேற்கொள்ளும்படி மத்திய அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் வலியுறுத்தவேண்டும்.

"சமூக நலத் திட்டங்களிலும், தேசீய வளர்ச்சி ஏற்பாடுகளிலும் செலவழிக்கப்படும் பணம், பெரிதும் நிர்வாகத் துறையிலேயே செலவழிக்கப்பட்டு வருகிறது. மிக மிகக் குறைவானத் தொகையே உண்மையான வேலையில் செலவழிக்கப்படுகிறது. இந்த நிலை வருந்தக்கூடியதாகும்.

"மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிப்பவர்களின் தொகை ஒவ்வொரு ஆண்டும் கூடினபோதிலும், கிராமபகுதிகளில்பணியாற்றும்பட்டம்பெற்ற டாக்டர்களின் எண்ணிக்கை எப்பொழுதும்போலவே கீழ் நிலையிலேயே இருந்துவருகிறது. மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்படுவதற்கு, பட்டம் பெற்ற பிறகு கண்டிப்பாக ஒவ்வொரு மாணவரும் கிராமப்புறங்களில் பணிபுரிய வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்க வேண்டும்."

முத்துப்பேட்டையில் அர்த்தால் முழு வெற்றி

தேசீய தினசரிகளின் பித்தலாட்டம்

25—2—56 (வெளியூர்) 'மித்திரன்,' 'தினமணி' இதழ்களில், 'முத்துப்பேட்டையில் பிப்ரவரி 20-ல் அர்த்தால் நடைபெறவில்லை' என்று செய்திகள் வெளியாகியுள்ளது.

உண்மையில் முத்துப்பேட்டையில் பிப்ரவரி 20-ல் அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது முத்துப்பேட்டை கழக உயர்நிலைப் பள்ளியில், அன்று 60 சதவிகித மாணவர்கள் பள்ளிக்கே போகவில்லை.

மாணவர்களின் தலைவர் திரு எம். என். சுப்பிரமணியத்தை சில காங்கிரஸ்காரர்கள் பயமுறுத்தியும் கூட மாணவர்கள் கட்டுக்கோப்பாக வகுப்புக்கே போகவில்லை.

திருத்துறைப்பூண்டி ரோடில் அமைந்துள்ள எல்லாக் கடைகளும், சிற்றுண்டி விடுதிகளும் அன்று மூடிக்கிடந்தது.

முத்துப்பேட்டையிலேயே பெரிய ரைஸ் மில்லான மீனாட்சி ரைஸ்மில்—கருணாநிதி ரைஸ்மில் (200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள்) இரண்டும் அன்று வேலை செய்யவேயில்லை

கடைத்தெருவில் சில காங்கிரஸ்காரர்களின் கடைமட்டும் திறந்து கிடந்தது ; பாக்கியுள்ள பல கடைகள் மூடியே கிடந்தது. ஊர்வலத்திற்கு அனுமதி கிடைக்காததால் மாலை 5 மணிக்கு வ எஸ். என் திடலில் திரு. இ. கே. முகமது இஸ்மாயில் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது சர்வகட்சித் தோழர்களும் பேசினார்கள். தோழர் கே. கருப்பையன் உறுதிமொழி படிக்க கூட்டம் இரவு சரியாக 7 மணிக்கு அமைதியுடன் கலைந்தது.

இத்தனை நிகழ்ச்சிகளும் முத்துப்பேட்டையில் நடந்திருந்தும், 'மித்திரன்' நிருபரின் பித்தலாட்டத்தால், 'அர்த்தாலே நடைபெறவில்லை,' என்று 'மித்திரனி'லும், 'தினமணி'யிலும் செய்திகள் வெளியாகியுள்ளது.

தட்சிணப் பிரதேச யோசனைக்கு எதிர்ப்பு

திராவிட பார்லிமெண்டரி கட்சி தீர்மானம்

சென்னை, பிப். 29—

மாநில சீரமைப்புக் குழுவின் சிபாரிசுப்படி கேரள, கன்னட மாநிலங்கள் அமைக்கப்பட்ட பின்பு, சென்னை மாநிலம் 'தமிழ் நாடு' என்று அழைக்கப்பட வேண்டும் ; திரு — கொச்சியிலுள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழகத்தில் சேர்க்கப்பட வேண்டும் ; தமிழ் நாட்டை வேறு எந்த இரு மொழி அல்லது பல மொழி வழங்கும் மாநிலத்தில் சேர்க்கக்கூடாது,"

என்ற தீர்மானம், சென்னை திராவிட பார்லிமெண்டரி கட்சியின் கூட்டம், தோழர் எஸ் சுயம்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற போது நிறைவேற்றப்பட்டது.

தட்சிணப் பிரதேச அமைப்பு யோசனையை கண்டித்து பிப். 20ல் நடந்த அர்த்தால் கட்சிக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு, அர்த்தால் சமாதானமான முறையில் நடந்தது குறித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

வாபஸ் பெறப்படுமாம்

சண்டிகார், பிப் 28—

கடந்த ஜூலைத் திங்களில் நடந்த கிளர்ச்சி சம்பந்தமாக பல அகாலிகள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன ; இவ்வழக்குகள் அனைத்தையும் வாபஸ் பெற்றுவிடுவதென்று பஞ்சாப் சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்.

காவலில் உள்ளவர்களை விடுதலை செய்வதென்றும், பத்திரிகைகள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

விரிவாக்கும் உத்தேசம் கிடையாதாம் !

சென்னை, பிப். 28—

மோட்டார் தொழிலாளருக்கும் 'பிராவிடெண்ட் பண்டு' சட்டத்தை விரிவாக்குவதற்கு சர்க்கார் தற்போது உத்தேசிக்கவில்லையென்றும், 10,000 தொழிலாளர்கள் இத்தொழிலில் இல்லாததே இதற்கு காரணமென்றும் அமைச்சர் பக்தவத்சலம், சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது கூறியுள்ளார்.

சென்னைத் தமிழாசிரியர் கழக பொது உறுப்பினர் கூட்டம்

2—3—56 மாலை 5-30 மணிக்கு மேற்படி கூட்டம் சென்னை பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் பற்றி ஆராயப்படும்.

முகவரி மாற்றம்

சி. எஸ். கன்னையா,

'நம் நாடு' ஏஜெண்ட்,

24, வல்லம்பங்காரு செட்டித்தெரு

சென்னை-7.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

மைசூர்—கேரளம் இணைப்பு முயற்சி

மார்ச் மாத இறுதியில் முடிவு தெரியுமாம் !

புதுடில்லி, பிப். 28—

திரு - கொச்சி — சென்னை இணைப்பு சம்பந்தமாகத் தமிழ் நாட்டில் எதிர்ப்பு தோன்றியிருப்பதால், திரு-கொச்சி—மைசூர் இணைப்பில் இப்போது கவனம் செலுத்தப்படுகிறது.

காங்கிரஸ் காரியதரிசி கே. பி. மாதவன் நாயர், சென்ற வாரம், மைசூர் தலைவர்களுடன் இந்த இணைப்புப் பற்றி விவாதித்தார் ; விவாதத்தின் விவரங்களை திரு-கொச்சி தலைவர்களிடம் தெரிவிப்பதற்கு அவர் விரைந்துள்ளார்.

இந்த இணைப்புக்காகச் செய்யப்பட்டுவரும் முயற்சிகளின் முடிவு மார்ச் மாதக் கடைசியில் தெரியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இணைப்பு ஏற்பட்டால், தென்னாட்டில் மைசூர், சென்னை, ஐதராபாத் என்று மூன்று மாநிலங்கள் இருக்கும்.

பாகிஸ்தான் குடியரசின் முதல் தலைவர்

கராச்சி, பிப். 28—

கவர்னர்-ஜெனரலாக இப்போது பதவியிலிருக்கும் மேஜர்-ஜெனரல் இஸ்கந்தர் மிர்ஜா, பாகிஸ்தான் குடியரசானதும் இடைக்காலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடுமாம்.

அரசியல் சட்டத்தை நிறைவேற்றியதும், அ. நி. சபை மக்கள் சபையாகமாறி, மார்ச் 5-ந் தேதி வாக்கில் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்.

இந்திய சர்க்காரின் புது வரிகள்

புதுடில்லி, பிப். 29—

ஏற்கனவே உள்ள வரி திட்டப்படி, 'ரெவினியூ' கணக்கில் துண்டுவிழும் ரூ. 51·83 கோடியை சமாளிப்பதற்குப் பின்வரும் வரிகளையும், வரி மாற்றங்களையும் மத்திய ஆட்சியின் நிதி அமைச்சர் தேஷ்முக் அறிவித்துள்ளார்.

புது வரிகள், தீர்வை, உயர்வுகள் மூலம் ரூ. 34·15 கோடி சரிகட்டப்பட்டுவிட்டது.

எனவே, துண்டு விழுவது 17·68 கோடிதான் ; மூலதனச் செலவு இதில் சேரவில்லை ; எனவே, இந்தத் துண்டுத் தொகை அப்படியே விட்டுவிடப்படும்.

'மோட்டா' ரக சேலைகள், வேட்டிகள் தவிர, ஏனைய எல்லா ஆலைப் பருத்தித் துணிகளுக்கும் சதுர கெஜம் ஒன்றுக்கு, ½ அணா வரி உயர்வு ; இதன் மூலம் ரூ. 14·50 கோடி அதிகம் கிடைக்கும்.

தந்திக்கு மிகக் குறைந்த கட்டணம் 12 அணாவாக இருப்பது 13 அணாவாக உயர்த்தப்படுகிறது.

'எக்ஸ்பிரஸ்' தந்திக்கு ரூ. 1½ ஆக இருப்பது ரூ. 1—10—0 ஆக விதிக்கப்படுகிறது.

'ரிஜிஸ்டர்ட்' தபால் கட்டணம் 6 அணாவாக இருப்பது 8 அணாவாக உயர்த்தப்படும்.

கண்ணாடி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் 'திரவதங்க'த்துக்கு 31·5 சதவிகிதமாக உள்ள வரி, இப்போது 62·5 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது.

இராத்தல் ஒன்றுக்கு ரூ 3-4-0 முதல் ரூ 4 வரை விலையுள்ள தேயிலைக்கு 6 அணாவாக உள்ள வரி, 4 அணாவாகக் குறைக்கப்படும்.

தாவர எண்ணெய் மீது புதிதாக இராத்தல் ஒன்றுக்கு ½ அணா வரி; இது, விசையால் இயங்கும் தொழிற்சாலை தயாரிப்புகளுக்கு மட்டுந்தான்.

அட்டைக்கு ('ஸ்ட்ராபோர்டு') இராத்தலுக்கு ½ அணா வரி.

'டீசல்' எண்ணெய் ('ஹை-ஸ்பீட்') மீது கூடுதலான வரி, காலன் ஒன்றுக்கு 4 அணா.

'வேபரைசிங்' எண்ணெய்க்கு காலனுக்கு 4 அணா; 'ஹை-ஸ்பீட்' 'டீசல்' எண்ணெய் தவிர, மற்ற ரக 'டீசல்' எண்ணெக்கு டன்னுக்கு ரூ. 30-ம், உலைக்கூட எண்ணெய்க்கு ('பர்னேஸ்' எண்ணெய்) டன்னுக்கு ரூ. 15-ம் விதிக்கப்படுகிறது.

ரூ. 70,000-க்கு மேற்பட்ட வருமானங்களுக்குள்ள 'சூபர் டாக்ஸில்' சிற்சில மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இதன் பொருட்டு ரூ. 1,50,000-க்கு மேற்பட்ட வருவாய்கள் மீது வரி 81·6 சதவிகிதமாக இருப்பது 91·1 சதவிகிதமாக உயரும்.

பதிவு செய்யப்பட்ட 'பர்ம்' (தொழிற்சாலைகள்)களின் வருமானத்தின் மீது ரூ. 75,000 வரையுள்ள வருமானத்திற்கு ¾ அணா வீதமும், ரூ. 1,50,000 வரையுள்ள வருமானத்திற்கு ஒரு அணா வீதமும், அதற்கு மேற்பட்டதற்கு 1½ அணா வீதமும் வருமான வரி ; பங்குதாரர்களுக்கு இதில் 'ரிபேட்' கிடைக்கும் ; சூபர் டாக்சில் 'ரிபேட்' கிடையாது.

'போனஸ்' பங்குகள் மீது ரூபாய்க்கு 2 அணா வரி.

'டார்ச் லைட்'டுகள், அதன் உறைகள்மீது இப்போதுள்ள 39·28 வரி 50.1 ஆக உயர்த்தப்படும்.

'23 - ஏ' கம்பெனிகள் அல்லாதவைகளின் வினியோகிக்கப்படாத லாபம் சம்பந்தமாக ஒரு அணா 'ரிபேட்' கொடுப்பது இனி நிறுத்தப்படும். '33' கம்பெனிகள் (வெறும் முதலீடு கம்பெனிகள்) வினியோகிக்காத இலாபத்தின் மீதுள்ள 'பீனல் சூபர் டாக்ஸ்' 4 அணாவாக உள்ளது. 8 அணாவாக உயர்த்தப்படும்.

இந்தியக் கம்பெனிகள் மீது விதிக்கும் 'சூப்பர் டாக்ஸ்' விகிதத்தில் மாற்றமில்லை ; ஆனால், 6 சத விகிதத்திற்கு மேல் கொடுக்கப்படும். 'டிவிடெண்டு'களுக்கு தனி வரி உண்டு ; 'டிவிடெண்டா'னது 6 சத விகிதத்திற்கு மேல் 10 சத விகிதம் இருந்தால், இந்த அதிக வரி ரூபாய்க்கு 2 அணா. 10 சத விகிதத்திற்கு மேற்பட்டவைகளுக்கு 3 அணா வரி.

வரிக்குத் தப்பிய வருமானங்களை மீண்டும் பரிசீலனை செய்வதற்கு 1956 மார்ச் 31-ந் தேதி வரை வாய்தா என்று காலவரை இருந்தது. மோசடியாக வரிக்குத் தப்பிய எல்லா வருமானங்களிலும இனி மறு பரிசீலனை உண்டு.

மின்சார உதவி இன்றி தயாரிக்கப்படும் சோப்புகளுக்கு, மின்சாரத் துணையுடன் செய்யப்படும் சோப்புகளுக்கு விதிக்கப்படும தீர்வையைவிடச் சற்றுக் குறைவான தீர்வை விதிக்கப்படும். இதிலும் கூட, சிறு உற்பத்தி நிலையங்களுக்கு விலக்கு அளிக்கப்படும்.